Crl.Misc.39

D E P O S I T I O N O F W I T N E S S
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.
Case No. STC 42/2021
**P.W**.8 (LW10)

Name : திரு.சங்கர்
Father/Husband Name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

1வது எதிரி ஆஜரில் உள்ளார். 2வது எதிரி ஆஜரில் இல்லை. மனு தாக்கல் செய்து ஏற்கப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.06.2026

மனுவின் பேரில் திரு.சங்கர், காவல் ஆய்வாளர் இந்த வழக்கில் கூடுதல் சாட்சியம் அளிக்க அனுமதிக்கப்படுகிறார்.

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது கல்பாக்கம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரியான வட்ட காவல் ஆய்வாளர் ராமு என்பவரின் கையெழுத்து கையொப்பம் நன்கு தெரியும் என்பதால் ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 03.01.2019ம் தேதி 15.00 மணியளவில் கல்பாக்கம் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளர் வெங்கடேசன் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்தபோது வேலன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரைபெற்று நிலைய குற்ற எண்.05/2019 இ.த.ச.பிரிவுகள் 338 ல் வழக்கு பதிவு செய்து முதல் கட்ட விசாரணை முடித்து வைத்திருந்த வழக்கு கோப்பினை வட்ட காவல் ஆய்வாளர் ராமு தனது விசாரணைக்கு எடுத்துக் கொண்டு மருத்துவர் சுவேதாஅகர்வால் என்பவரை விசாரணை

செய்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்றார். இந்த வழக்கில் காயம் அடைந்த நபரான சுபுராஜ் என்பவருக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என்று சான்றளிக்கப்பட்டுள்ளதால் இந்த வழக்கின் சட்டப்பிரிவினை 338 இ.த.ச.விலிருந்து 285, 337 இ.த.ச.வாக பிரிவு மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்துள்ளார். **(சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** இந்த வழக்கின் எதிரிகளான கார்த்திகேயன், சேகர் ஆகியோர் நீதிமன்றத்தில் ஆஜராகி பிணையில் சென்றுவிட்டார்கள்.

3. இத்துடன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள் 285, 337 ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை,</u>**

இந்த வழக்கில் நான் புலன் விசாரணை அதிகாரி இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான ராமு தற்போது காவல் துறையில் பணியாற்றி வருகிறார் என்றால் சரிதான். எதிரிகள் மீது தாக்கல் செய்துள்ள இறுதி அறிக்கையானது மருத்துவருடைய காயச்சான்றை பொறுத்து அமைந்துள்ளது என்றால் சரிதான். மருத்துவர் வழங்கிய காயச்சான்றில் எந்த வகையான திரவத்தின் காரணமாக விபத்து ஏற்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் தீ விபத்து எதுவும் ஏற்படவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கை 20 நாட்கள் காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.

(Sd)S.Vineeth
J.M./TKM.